3. சட்ட முன்வடிவுகள்.

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது பற்றி அறிவித்து விட்ட பிறகும் அதைப்பற்றி எதற்குப் பேசவேண்டும். அனைவரும் உட்காருமாறு கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்). இப்போது சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோரியிருக்கிறார்கள்.

(குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: நாங்கள் அதை ஆட்சேபனை செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆட்சேபனை செய்கின்றவர்கள் ஒன்று இரண்டு பேர்கள் மட்டும் ஒரு மணித்துளிக்குள்ளாக விளக்கம் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதித்திருக்கிறீர்கள். நான் அனுமதி கோரி இருக்கிறேன். அந்தப் பிரச்சினையை முடித்துவிட்டு அடுத்த பிரச்சினைக்குச் செல்வது சரியாக இருக்கும் என்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவுகள் அறிமுகப்படுத்துகிறபோது, அதிலே கருத்து வேறுபாடுகள் இருக்குமானால் அதற்கு அறிமுக நிலையிலேயே ஆட்சேபம் தெரிவிக்கின்ற உரிமைகள் எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. அந்த மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. தாங்களும் அந்த மரபைப் பின்பற்றி இப்போது அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறேன். திருச்சி சம்பவம் பற்றிக் கொடுத்திருக்கிறேன். அது ரொம்பவும் முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து இதை என்னுடைய அறையில் வந்து தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது சட்ட முன்வடிவு குறித்துத் தங்கள் கருத்தை அருள்கூர்ந்து ஒரு மணித் துளிக்குள் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

** திரு. சோ. அழகர்சாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய நடைமுறை விதிமுறைகள்படி கடந்த காலத்தில்கூட ஆளுநர் உரையின்போது முக்கியமான விஷயத்திற்கு அனுமதிக்கப்பட்டு வந்த காரணத்தினால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு நீங்கள் அனுமதித்தீர்கள். அதே மாதிரி மற்றொரு உறுப்பினர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை அரசினுடைய பதிலை எதிர்பார்த்துக் கொடுத்திருக்கின்றார்கள். அது சம்பந்தமாகவும் அனுமதிக்கப்படாமல் இருக்கிறதே. இந்த ஆளுநர் உரையின் போது நிகழக்கூடிய அவசரமான சில விஷயங்களை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் சரியான வழிமுறைகளை ஏற்படுத்துவார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

1989 பிப்ரவரி 15]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்போது ஒத்திவைப்புத் தீர்மானங்களை உள்ளடங்கிய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பு உறுப்பினர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால் அப்படிப் பேசும்போது அவைகளைச் சொல்லிக் கொள்ளலாம் என்கின்ற அளவில் கடந்த காலத்திலே தொன்று தொட்டு ஒரு மரபாகவே கவர்னர் உரையிலே விவாதம் நடக்கும் போது ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வதில்லை என்ற நிலை இருந்து வருகிறது.

இன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுவிலேகூட அதுபற்றிப் பேசும்போது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே ஆளுங்கட்சியோ எதிர்க்கட்சியோ யார் கொடுத்தாலும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வதுபற்றி எந்த மறுப்பும் இருக்கத் தேவையில்லை. அதுவே தங்களுடைய தீர்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 9-20)

THIRU M. SUNDARADOSS : On a point of clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் தயவுசெய்து ஒழுங்குப் பிரச்சினை விதியைப் புரட்டிப் பாருங்கள். விளக்கம் கூறுவதோ, தன்னிலை விளக்கமோ ஒழுங்குப் பிரச்சினையில் எழுப்பக் கூடாது என்பது விதி. அருள்கூர்ந்து உறுப்பினர் உட்காருங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாருடைய பேச்சிலும் விளக்கம் கேட்கக் கூடாது, தன்னிலை விளக்கமும் கூடாது என்பது விதி. உறுப்பினர் உட்காருங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது அதுபற்றிச் சொல்ல முடியாது. என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். அதுபற்றி முடிவாகச் சொல்கிறேன்.

3. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989—தொடர்ச்சி.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கின்றேன். நகராட்சிகளுக்கு வாக்களித்த மக்கள் மூன்று ஆண்டுகளுக்குத்தான் வாக்களித்திருக்கிறார்கள். அதை 5 ஆண்டுகளாக மாற்றுவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே. முன்பு தமிழகத்திலே இருந்து வந்த நடைமுறை 5 ஆண்டுக் காலத்திற்குள் உள்ளாட்சித் தேர்தல்கள் என்பதாகும். அதைத் தொடர்ந்து அனுமதிக்காத நிலையிலே 3 வருடமா, 4 வருடமா என்று அது தள்ளாடிக் கொண்டிருந்தது. இறுதியாக அதை 3 வருடம் என்று ஆக்கி மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவினை ஆதரிக்கின்றவர்கள் பேசத் தேவையில்லை. சட்ட முன்வடிவினை எதிர்க்கின்றவர்கள்தான் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது தவறான தகவல். ஆரம்பத்திலிருந்தே 5 ஆண்டுகள் என்று இருந்ததாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆரம்பத்தில் 3 ஆண்டுகள் என்று இருந்தது. அதை பின்னால் 5 ஆண்டுகள் என்று மாற்றினார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS